சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

அசல் வழக்கு எண்.133/2022

**07.02.2025**

**வா.சா.1 ராமு, த/பெ. நல்லசாமி**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

பிரதிவாதி என்னிடம் 10,00,000/- பணம் என 26.09.2021ல் கேட்டார். அன்றைய தினமே ரொக்கமாக பணத்தை கொடுத்துவிட்டேன். 500 ரூபாய் நோட்டுக்களாக கொடுத்தேன். 26.09.2021 அன்று மாலை 6 மணிக்கு பணம் கேட்டார், உடனடியாக நான் பணம் கொடுத்துவிட்டேன். அன்றைய தேதியில் என் ரூ.10,00,000/- என் கைவசம் இருந்தது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்ன தேவைக்காக பணம் கேட்டார் என்று முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன் குடும்ப செலவிற்கு என கேட்டார். 26.09.2021ல் பிரதிவாதி கடனுறுதிசீட்டு ஒன்றை எழுதிக்கொடுத்தார். கடனுறுதிசீட்டை திரும்ப வாங்கி கொண்டு காசோலை கொடுத்தார். கடனுறுதிசீட்டை எழுதிக்கொடுத்த 3 மாதத்தில் திரும்ப வாங்கி கொண்டு காசோலையை கொடுத்தார். கடனுறுதிசீட்டை வாங்கி கொண்டு தான் காசோலையை கொடுத்தார். இந்த விவரத்தை பிராதிலோ, பிரமாணவாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. கடனுறுதிசீட்டு நகலோ, அசலோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் அவர் வாங்கி சென்றுவிட்டார். நான் சொல்வது போல் பிரதிவாதி 26.09.2021ல் ரூ.10,00,000/- பணம் வாங்கவில்லை என்றாலும் கடனுறுதிசீட்டு எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் 26.09.2021ல் எனக்கும், பிரதிவாதிக்கும் எந்தவித வரவு, செலவுக்கான ஆவணமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி 25.05.2022 காசோலையை எனக்கு கொடுத்தார். 25.05.2022 அன்று காசோலை கொடுத்ததாக சொல்லும் நேரத்தில் நான் பிரதிவாதிக்கு தொகை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

பணம் கொடுத்ததாக கூறப்படும் தேதியில் கடனுறுதிசான்று எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பணம் வாங்கும் போது பிரதிவாதி கடனுறுதிசீட்டு மட்டும்தான் எழுதிக்கொடுத்தார். வேறு ஆவணம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை. எனது முதல்விசாரணையில் பிரதிவாதி கைலெட்டர் எழுதிக்கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். காசோலையை 25.05.2022 அன்றே பணமாக்க வங்கியில் செலுத்தினேன். காசோலையில் பிரதிவாதியின் கையொப்பம் மாறுபட்டு இருப்பதாக சொல்லி காசோலை திருப்பப்பட்டது. காசோலை வங்கியில் கொடுத்து மாறுபட்டுவிட்டதாக சொல்லி திருப்பப்பட்டால் அந்த ஆவணத்தின் தன்மை இழந்துவிட்டது என்றால் சரியல்ல. மீண்டும் காசோலையை 01.08.2022 ல் அதே வங்கியில் பணமாக்க செலுத்தினேன். அப்போது போதிய பணமில்லை என காசோலை திருப்பப்பட்டது. ஒரு காசோலைக்கு இரண்டுவித கருத்துக்கள் சொல்லி திருப்பப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். 30.05.2021 காசோலை திருப்பப்பட்டதுடன் காசோலை செயலிழந்துவிட்டது என்றால் சரியல்ல. முதலில் காசோலை திருப்பப்பட்ட பின்னர் பிரதிவாதியிடம் புதிய காசோலையோ அல்லது அதே காசோலையில் கையொப்பம் இட்டு வங்கியில் செலுத்தினேனா என்றால் இல்லை. காசோலையில் இரு வேறு பேனாக்களால் எழுதப்பட்டுள்ளது என்றால் பிரதிவாதி பூர்த்தி செய்திருந்தார். காசோலையை பிரதிவாதி நான் சொல்வது போல் என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எந்த தேதியில் பிரதிவாதி மேலும் 50 நாட்கள் கால அவகாசம் கேட்டார் என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் பிரதிவாதி என்னிடம் 10,00,000/- கடன் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் பணம் கொடுத்ததாக சொல்லும் தேதியில் ரூ.10,00,000/- கையிருப்பு வைத்திருக்கவில்லை என்றால் சரியல்ல.நான் வருமானவரி செலுத்துகிறேனா என்றால் செலுத்துகிறேன். வருமானவரி செலுத்தும்போது கையிருப்பு தொகை எவ்வளவு என்று காட்டயுள்ளேனா என்றால் இல்லை. 30.05.2022 அன்றே காசோலை செல்லும் தன்மை இழந்துவிட்டதால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அசல்

**வழக்கு காலாவதிதோஷத்தால் பாதிக்கப்பட்டது என்றாலும் நான் சுத்தமான கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.**

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.